தரம் 06	பாடசாலை மட்ட இறுதி மதிப்பீடு – 2023(2024)	புள்ளி

விஞ்ஞானம்

சுட்டெண் | | | | | |

நேரம் : 2 மணித்தியாலம்

பகுதி – I

❖ **மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

1. உயிரங்கிகளின் தொடர்ச்சியான நிலவுகைக்கு காரணமாக அமைவது,
   (1) ஒளித்தொகுப்பு (2) வளர்ச்சி (3) இடப்பெயர்ச்சி (4) இனப்பெருக்கம்

2. இச்சுற்றில் மின்குமிழ் ஒளிர வேண்டுமெனில் A, B முடிவிடத்தில் இணைக்க வேண்டியது,
   (1) பிளாஸ்டிக்
   (2) நாணயம்
   (3) பொலித்தீன்
   (4) உலர் கடதாசி



3. விசையைப் பிரயோகிப்பதன் மூலம் திரவியங்களை தகடாக்கக் கூடிய தன்மை,
   (1) வாட்டத்தகு தன்மை (2) நீட்டத்தகு தன்மை
   (3) வன்மைத் தன்மை (4) மீள்தன்மை

4. நீரை அவை பெறப்படும் மூலங்களின் அடிப்படையில் வகைப்படுத்தும் போது P, Q, R இனை முறையாக குறிப்பது,
   (1) படிவுவீழ்ச்சி, மேற்பரப்பு நீர், நிலக்கீழ் நீர்
   (2) மேற்பரப்பு நீர், நிலக்கீழ் நீர், படிவுவீழ்ச்சி
   (3) படிவுவீழ்ச்சி, நிலக்கீழ் நீர், மேற்பரப்பு நீர்
   (4) மேற்பரப்பு நீர், படிவுவீழ்ச்சி, நிலக்கீழ் நீர்



5. தாவரங்களின் ஒளித்தொகுப்பிற்கு அவசியமற்றது,
   (1) காபனீரொட்சைட்டு (2) ஒட்சிசன்
   (3) நீர் (4) சூரய ஒளி

6. இசை ஒலி எனப்படுவது,
   (1) இசைக் கருவிகளிலிருந்து இசைக்கும் ஒலி (2) சந்தையில் ஏற்படும் ஒலி
   (3) இசைக் கலைஞர்களால் ஏற்படுத்தும் ஒலி (4) சந்தத்திற்கேற்ப இசைக்கும் ஒலி

7. அருகே தரப்பட்டுள்ள அமைப்பு குறிப்பது,
   (1) சூரியபடல் (2) சூரிய அடுப்பு
   (3) மரத்தூள் அடுப்பு (4) சூரிய வெப்பமாக்கி



8. வலிமை குறைந்த காந்தத்தினைக் காட்டும் உரு,
   (1) (2)  (3)  (4) 

9. யாதேனும் பொருளில் அடங்கியுள்ள சடப்பொருளின் அளவு,
   (1) விசை (2) நிறை (3) திணிவு (4) கனவளவு

10. ஒளி பற்றிய பின்வரும் கூற்றுக்களில் சரியானது / சரியானவை

A. ஒளி நேர்கோட்டில் செல்லும்
B. ஒளியானது எல்லாப் பொருட்களினூடாகவும் உட்செல்லாது
C. ஒளி செல்லும் திசையைக் காட்ட அம்புக்குறி பயன்படும்

(1) A மட்டும் (2) B மட்டும் (3) A, B, C யாவும் சரி (4) A, C மட்டும்

11. மனித உடலின் சராசரி வெப்பநிலை,

(1) 36 °C (2) 37 °C (3) 35 °C (4) 38 °C

12. வானிலை தொடர்பான தகவல்களை வெளியிட அவசியமான வெப்பநிலை , ஈரப்பதன், காற்றின் திசை , காற்றின் வேகம் போன்றவற்றை அளவிடப் பயன்படும் கருவிகளை சரியாகக் குறிப்பது முறையே,



(1) A, C, B, D (2) C, B, A, D (3) C, A, B, D (4) C, A, D, B

13. அதிக சூரிய வெப்பத்தின் காரணமாக சூழலில் ஏற்படும் விளைவு **அல்லாதது,**

(1) கிணற்றில் நீர்மட்டம் உயர்தல் (2) குளம் வற்றிப் போதல்
(3) நிலத்தில் வெடிப்புகள் ஏற்படல் (4) சூழலில் தூசுகள் அதிகரித்தல்

14. அருகே தரப்பட்டுள்ள சுற்றிலுள்ள கூறுகளான P, Q, R ஐ முறையே சரியாக குறிப்பது,

(1) அம்பியர்மானி, மின் குமிழ், உலர் மின்கலம்
(2) மின் குமிழ், உலர் மின்கலம், அம்பியர்மானி
(3) மின் குமிழ், அம்பியர்மானி, உலர் மின்கலம்
(4) அம்பியர்மானி, உலர் மின்கலம், மின் குமிழ்



15. பண்டா எனும் தாவர உண்ணி உணவாக உட்கொள்ளும் தாவரம்,

(1) வைக்கோல் (2) புல் (3) சணல் (4) மூங்கில்

16. வளிமண்டலத்தில் காணப்படும் நீரின் பௌதிக நிலையை இனங்காண்பதற்கான கீழ்வரும் பரிசோதனையில் குறிக்கோளிற்கு ஆதாரமாக அமையும் அவதானம்,



(1) பனிக்கட்டி நீரில் மிதத்தல்
(2) பனிக்கட்டி கரைதல்
(3) கண்ணாடிக் குவளையின் வெளி மேற்பரப்பில் நீர்த்துளி படிந்திருத்தல்
(4) சிறிது நேரத்தில் பனிக்கட்டி அமிழ்தல்

17. பனிக்கட்டி நீராக மாறும் போது ஏற்படும் நிலைமாற்றம்,

(1) திண்மம் ⟶ வாயு
(2) திண்மம் ⟶ திரவம்
(3) திரவம் ⟶ திண்மம்
(4) திரவம் ⟶ வாயு

18. சமிக்ஞை விளக்குகள் பயன்படுத்தும் சந்தர்ப்பம் **அல்லாதது,**

(1) அம்பியுலேன்ஸ் (2) பொழுதுபோக்கு
(3) தீயணைப்பு வண்டி (4) கலங்கரை விளக்கு

19. பரியிலாடக் காந்தத்தைக் காட்டும் உரு,

(1)
(2)
(3)
(4)

20. இலங்கையில் ஏற்படக் கூடிய இயற்கை அனர்த்தமாக **அமையாதது,**

(1) மண்சரிவு (2) சூறாவளி (3) சுனாமி (4) எரிமலை வெடிப்பு

(2 x 20 = 40 Marks)

பகுதி - II

❖ **எல்லா வினாக்களுக்கும் விடையளிகவும்.**

01)

A. கீழே தரப்பட்ட வயல் காட்சியை அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கு விடையளிக்க.

(i) இங்கு காணப்படும் உயிருள்ள, உயிரற்ற கூறுகள் 2 வீதம் தருக.

உயிருள்ளவை:..

உயிரற்றவை :..

(ii) இச் சூழலில் வாழும் கண்களுக்கு புலப்படாத அங்கிகள் எவ்வாறு அழைக்கப்படும்?

....

(iii) இச்சூழலில் காணப்படும் தற்போசணை பிறபோசணை அங்கிகளைக் குறிப்பிடுக.

தற்போசணி :..

பிறபோசணி :..

(iv) தாவரங்கள் உணவு உற்பத்தி செய்யப்படும் செயற்பாடு எவ்வாறு அழைக்கப்படும்?

....

(v) இங்கு காணப்படக் கூடிய பின்வரும் அங்கிகள் இடம்பெயரும் முறைகளைக் குறிப்பிடுக.

a. பறவை :..

b. மாடு :..

(vi) வயல் நிலங்களுக்கு ஓடை மூலம் நீர் வழங்கப்படுகிறது. இது எவ்வகையான நீர் மூலம் என அழைக்கப்படும்?

....

(vii) உருவில் காணப்படக் கூடிய அங்கிகளைக் கொண்டு 3 இணைப்பினைக் கொண்ட உணவுச்சங்கிலி ஒன்றினை தருக.

....

(viii) இங்கு சக்தியானது சூழலிற்கு நேயமாகவும், சிக்கனமாகப் பயன்படுத்தப்பட்டிருப்பதுமான நிகழ்வு ஒன்றைத் தருக.

....

(12 Marks)

02) மின் உற்பத்தி செய்யக் கூடிய இரு எளிய வழிகள் உருவில் காட்டப்பட்டுள்ளன.



A.

(i) இரு சுற்றுகளிலும் இணைக்கப்பட்டுள்ள மின்னியல் கூறு Z யாது?

....

(ii) சுற்று X இல் சட்டக் காந்தத்தினை கம்பிச் சுருளினூடாக அசைக்கும் போது அவதானம் யாது?

....

(iii) சுற்று X இல் காட்டப்பட்டுள்ள தத்துவத்தின் அடிப்படையில் மின்னுற்பத்தி செய்யப்படும் சந்தர்ப்பங்கள் 2 தருக.

....

....

(iv) கம்பிச் சுருளின் முனைகளை தொடுக்கும் கம்பியினுடன் இணைக்கும் போது மேற்கொள்ள வேண்டிய செயற்பாடு யாது?

....

B.

(i) சுற்று Y இல் நீர்த்தாரையானது அமைக்கப்பட்ட சுழலியின் மீது விழச் செய்யும் போது அவதானம் யாது?

....

(ii) மின்னியல் கூறு Z இற்குப் பதிலாக ஒளிகாலும் இருவாயி (LED) இணைக்கப்படின் யாது நிகழும்?

....

3ஆம் தவணைப் பரீட்சை 2023

தரம் 6 விஞ்ஞானம் - விடைகளும் புள்ளித்தி திட்டமும் நேரம்: 1 1/2 மணி

பகுதி – 1

1.	**4**	6.	**4**	11.	**2**	16.	**3**
2.	**2**	7.	**3**	12.	**4**	17.	**2**
3.	**1**	8.	**1**	13.	**1**	18.	**2**
4.	**1**	9.	**3**	14.	**3**	19.	**4**
5.	**2**	10.	**3**	15.	**4**	20.	

(20 x 2 =40 Marks)

பகுதி – II

01)

A.

i. உயிருள்ளவை – பறவை, மனிதன், மாடு ❷
உயிரற்றவை – மலை, நீர், விகாரை
(பொருத்தமான விடைகள்)

ii. நுண்ணங்கிகள் ❶

iii. தற்போசணி – தாவரங்கள் ❷
பிறபோசணி – மனிதன், மாடு

iv. ஒளித்தொகுப்பு ❶

v. பறவை – பறத்தல் ❷
மாடு – நடத்தல்

vi. மேற்பரப்பு நீர் ❶

vii. தாவரம் ⟶ மாடு ⟶ மனிதன் ❷

viii. மாட்டு வண்டி பயன்படுத்தப்படல், மனிதன் தானே பொருளை தூக்கிச் செல்லல் ❶

12 புள்ளிகள்

02)

A. ❶

i. மையப் பூச்சிய கல்வனோமானி/ கல்வனோமானி

ii. கல்வனோமானி திரும்பலைக் காட்டும் ❶

iii. மின்மோட்டார், சைக்கிள் டைனமோ ❷

iv. கம்பிச் சுருளின் முனைகளை சுரண்டி விடுதல் ❶

B.

i. கல்வனோமானி திரும்பலைக் காட்டும் ❶

ii. LED ஒளிரும் ❶

iii. காற்றுச்சக்தி ❶

iv. நீர் மின்வலு நிலையம் – கொத்மலை, விக்டோரியா, ரன்தெனிகல ❷

v. காற்று மின்வலு நிலையம் – அம்பாந்தோட்டை

vi. அணுச்சக்தி, கடலலை ❷

12 புள்ளிகள்

03)

A.

i. பசு, வெட்டுக்கிளி, மயிர்க்கொட்டி (ஏதாவது 2) ❷

ii. குருவி, பூனை, ஓணான் (ஏதாவது 2) ❷

iii. குருவி ❶

B.

i. உவர் நீர் ❶

ii. சோடியம் குளோரைட்டு ❶

iii. பனியாறு, பனிக்கட்டி, மூடுபனி ❷

iv. 0.01% ❶

v. பொருத்தமான விடை ❷

12 புள்ளிகள்

04)

A. ❶

i. மெழுகுவர்த்திரியின் சுவாலையை பார்க்க முடியாது

ii. 1 – மெழுகுவர்த்திரியின் சுவாலையை தெளிவாக பார்க்க முடியும்
2 – மெழுகுவர்த்திரியின் சுவாலையை தெளிவாக பார்க்க முடியாது
3 – மெழுகுவர்த்திரியின் சுவாலையை பார்க்க முடியாது ❸

iii. கண்ணில் தோன்றும் வெண்படலத்தை அகற்றல், இதய சத்திர சிகிச்சை, இரப்பை புண்ணிற்கு சிகிச்சையளித்தல், என்டஸ்கோப்பி (ஏதாவது 2) ❷

B.

i. தென்முனையை ❶

ii. வட முனையை ❶

iii. ஒவ்வா முனைகள் ஒன்றையொன்று தள்ளும், ஒத்த முனைகள் ஒன்றையொன்று கவரும் ❷

iv. காந்தத்தால் கவரக் கூடிய பொருத்தமான பொருள் ❶

v. N – சிவப்பு
S – நீலம் ❶

12 புள்ளிகள்

05)

A.

i. கைக்குட்டை ஈரமாகாது ❶

ii. குவளைக்குள் காணப்பட்ட வளி இடத்தைப் பிடிப்பதால் குவளையினுள் நீர் உட் செல்லவில்லை ❶

iii. வளிக்கு திணிவுண்டு ❶

iv. பொருத்தமான விடை ❷

v. வெப்பத்தினால் விரிவடைதல் ❶

B.

i. mm
ii. ஒக்டோபர்
iii. பெப்ரவரி
iv. பெப்ரவரி
(i – iv) ❹

v. வெள்ளப்பெருக்கு, மண்சரிவு ❷

12 புள்ளிகள்